முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 205/2014

இன்று 2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 09 ம் நாள் இன்று இந்த பி.வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : நடராஜன் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | கிராமம் | : |
| வயது | : | தாலூக்கா | : |
| நாள் | : 09-02-2026 | மாவட்டம் | : திருப்பூர் |

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. நானும் வாதியும் இந்த வழக்குரை பூமியை ஒன்றாக தான் கிரையம் பெற்றோம் என்றால் ஆமாம். நான் இந்த பூமியை கிரையம் செய்வதற்கு மட்டும் தான் பணம் கொடுத்தேன் என்றால் இல்லை இருவரும் சேர்ந்து தான் பூமியை வாங்கினோம். கட்டிடத்தை என்னுடைய சகோதரர் தான் கட்டினார் என்றால் சரியல்ல. நாங்கள் இருவரும் சேர்ந்து கட்டிடம் கட்டினோம் என்று காண்பிப்பதற்கு நான் ஆவணங்களை முன்நிலை படுத்தவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்து கட்டிடத்திற்கு நான் எவ்வளவு தொகை செலுத்தியுள்ளேன் என்றால் சிறுக சிறுக நிறைய கொடுத்துள்ளேன். தோராயமாக எவ்வளவு கொடுத்துள்ளனேன் என்றால் 20 லட்சம் ரூபாய் கொடுத்துள்ளேன். 20 லட்சம் ரூபாய் வங்கியில் இருந்து எடுத்த பணமாக அல்லது சேமித்து வைத்த பணமாக என்றால் நான் சேமித்து வைத்திருந்த நகைகளை வைத்து கொடுத்த பணம் ஆகும்.

2. இந்த விவரங்களை நான் என்னுடைய எதிர் வாதத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வாதி என்னுடைய முத்த சகோதரர் என்றால் ஆமாம். 2002 நான் எந்த தொழில் செய்தேன் என்றால் பணியம் கம்மனியில் வேலை செய்து வந்துள்ளேன். பணியம் கம்மனியில் எவ்வளவு கிடைக்கும் என்றால் 5000 முதல் 10000 வரை கிடைக்கும். இந்த பூமி கிரையம் செய்யும் போது எனது கையிருப்பு எவ்வளவு இருந்திருக்கும் என்றால் 20 லட்சம் ரூபாய் இருந்திருக்கும். 20 லட்சம் ரூபாய் என்னிடம் இருந்தது என்று காண்ப்பிக்க நான் எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்வில்லை என்றால் சரிதான்.

3. எனது சகோதருடன் பூமி வாங்குவதற்கு மட்டும் தான் தொகை கொடுத்துள்ளேன் கட்டிடம் கட்டுவதற்கு எந்த தொகையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் கட்டிடம் கட்டுவதற்கு எந்த தொகையும் கொடுக்கவில்லை வாதி வங்கியில் இருந்து கட்டிடம் கட்டினார் என்றால் சரியல்ல. நாங்கள் இருவரும் சேர்ந்து தான் கட்டினோம். அது எத்தனை மாடி கட்டிடம் என்றால் 2 மாடி கட்டிடம்.

அந்த கட்டிடத்தில் NSM fabrics என்ற உரிமையாளர் நிறுவனத்தை நடத்தி வருகிறார் என்றால் சரியல்ல இருவரும் சேர்ந்து தான் நடத்திவருகிறோம். நான் அந்த நிறுவனத்தில் பங்குதாரர் என்றால் ஆமாம். நான் NSM fabrics நிறுவனத்தில் பங்குதாரர் என்று காண்பிக்க எந்த ஆவணத்தியும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் இருவரும் சேர்ந்துதான் நடத்தி வருகிறோம்.

4. நான் இந்த வழக்கிற்காக நாங்கள் இருவரும் சேர்ந்து நடத்திவருகிறேன். வாதி மட்டும் தான் அந்த நிறுவனத்தில் உரிமையாளர் என்றால் சரியல்ல. தாவா கட்டிடத்தில் எவ்வளவு இயந்திரம் உள்ளது என்று எனக்கு தெரியுமாக என்றால் 14 இயந்திரம் உள்ளது. எனது சகோதரர் Catholic syrian வங்கியில் அடமானம் பெற்று நிறுவனம் நடத்தி வருகிறார் என்றால் சரிதான். லோனை இருவரும் அடைத்து வருகிறோம். எவ்வளவு லட்சம் தொகை catholic syrian வங்கியில் கடனாக உள்ளது என்றால் அந்த வங்கியில் உள்ள கடன் அனைத்தையும் அடைத்துவிட்டோம். பழனிசாமி தான் அந்த கடன்முழுவதையும் அடைத்தார் என்றால் இல்லை. வேறு யார் அடைத்தார் என்றால் நாங்கள் இருவரும் சேர்ந்து தான் அடைத்தோம்.

5. நாங்கள் இருவரும் சேர்ந்த அடைந்தோம் என்று கண்பிக்க ஏதேனும் ஆவணம் உள்ளது என்றால் இல்லை. அவர் படித்திருந்தார் அதனால் அவர் பெயரிலே அனைத்தும் செய்துவிட்டோம். வங்கியில் சென்று நானும் கடனை அடைத்தேன் என்று ரசீது பெற முடியும் என்றால் சரிதான். இந்த வாதியை நான் தாவா சொத்தில் வடகைக்கு தங்க அனுமதித்தேன் என்றால் சரியல்ல. மாத வாடகை ரூபாய் 15000 என முடிவு செய்யப்பட்டு எனது வங்கி கணக்கு account pay cheque முலம் செலுத்தப்பட்டது என்றால் சரியல்ல. அந்த கட்டிடத்தில் வாதி பழனிசாமி இன்னமும் தொழில் செய்து வருகிறார் என்றால் ஆமாம். நான் உள்ளே வர கூடாது என்று பிரச்சனை செய்து வருகிறார்.

6. நான் தான் வாதியை உள்ளே வர கூடாது என்றும் தொழில் செய்ய கூடாது என்று சொல்லி பிரச்சனை செய்கிறேன் என்றால் சரியல்ல. நான் தான் வாதிக்கு பல்வெறு இடைஞ்சல் செய்கிறேன் என்றால் சரியல்ல. 12.06.2016 அன்று நான் காசோலை வாடகை தொகைக்கு கொடுத்தும் அதை நான் திருப்ப கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் தான் அடியாட்கள் உடன் தாவா சொத்தில் பிரச்சனை செய்து வந்தேன் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA Digitally signed by VANITHA Date: 2026.02.09 17:58:19 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.